உ

SIVAMAYAM





# SRI DHARBARANYESWARA SWAMY DEVASTHANAM

## LORD SANEESWARA BAGHAWAN STHALAM

## THIRUNALLAR - 609 607.

# SANIPEYARCHI FESTIVAL

**SRI SANEESWARA BAGHAWAN TRANSITS**
**FROM KANNIYA RASI (VIRGO) to THULAM (LIBRA)**
**0n 21.12.2011 WEDNESDAY at 7.51 A.M. (Morning)**

**Sri Dharbaranyeswaraswamy Devasthanam,** Thirunallar is one of the famous Lord Siva temples, in India. Thirunallar is located 5 K.M. west of Karaikal and in the bus route of Karaikal - Mayiladuthurai and Kumbakonam. This is an ancient Siva temple probably constructed in 7th Century A.D Sri Dharbaranyeswarar is the main deity and Lord Saturn, Sri Pranambigai, Sri Thiagarajar and Sri Vinayagar are other deities. The Saneeswarar temple of Sri Dharbaranyeswaraswamy Devasthanam attracts devotees not only from India but also from other countries. This temple is unique in its kind and is the only temple dedicated to Lord Saturn where he is a blessing God having **"ABHAYAHASTHAM"**. As per the history of the temple, the great king Nala of puranic fame was relieved of the affliction of Lord Saturn or Lord Saneeswaran after worshipping the Lord consecreted in this temple. Whoever visits this temple and prays before Lord Saneeswaran is believed to have been relieved of all the curses and sufferings and get the blessings of Lord for a happy and prosperous life.

## SANIPEYARCHI FESTIVAL

Among the Navagrahas, Lord Saturn (Saneeswarar) occupies an important place. A malefic Saturn in one's horoscope is believed to cause miseries and hardships which can be mitigated by worshipping him. According to astrology, Saneeswaran moves from one sign (house) to the next in the Zodiac once in 2 $^1/_2$ years and the day of his transit is observed as a sanipeyarchi festival in Thirunallar. On the day previous to the day of transit, religious discourses and entertainments are arranged. On the festival day, Devaram isai are chanted at 4.00 a.m. An Abishegam on a grand scale is performed for the Lord Saneeswara Baghawan. Oil, Milk, Curd, Rose-Water, Tender Coconut water, Fruit juice etc., are used for the Abishegam.

Arrangements are made to have darshan of Lord Saneeswara Baghawan on the Golden Crow Vahana during the Sanipeyarchi festival. Special poojas like Abishegam and Sahasranama archana are performed on the Sanipeyarchi festival day to the deities for those who wish to remit the prescribed amount by cash in the office / by M.O / D.D.

**The Pooja rates are as follows:-**

| | |
|---|---|
| 1. Abishegam on the Sanipeyarchi day per Each | Rs. 250.00 |
| 2. Sahasranama Archana on the Sanipeyarchi day per Each | Rs.150.00 |

The ensuing Sanipeyarchi Festival will be held on 21.12.2011 at 7.51 a.m. (Morning). This time Lord Saturn transits from KANNIYA RASI (VIRGO) to THULAM (LIBRA)

Other information if any can be had from the Executive Officer, Sri Dharbaranyeswara Swamy Devasthanam. Lord Saneeswara Baghawan Sthalam, Thirunallar over phone or in person. "Email" facilities are also available.

**Dr.FRANKLIN LALTINKHUMA, I.A.S**
Special Officer

**S.K. PANNEERSELVAM**
Executive Officer (Temples)

Ph:- Office : (04368) 236530    Fax : (04368) 236504    E-mail : sds.kkl@nic.in

Website : www.thirunallaru.org

NB : Devotees who wish to perform poojas in Lord Saneeswara Baghawan temple are requested to send the amount by means of M.O. or D.D. to the Executive Officer, Sri Dharbaranyeswara Swamy Devasthanam, Thirunallar - 609 607 directly, not to any person or agency.

Reshma Printers_TRP. Cell : 90800 58092, 90800 66847

உ
சிவமயம்



# ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்
# ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஸ்தலம்

திருநள்ளாறு – 609607.

# சனிப்பெயர்ச்சி விழா

## கன்னியா ராசியிலிருந்து துலாம் ராசிக்கு 21.12.2011 காலை 7.51 மணி

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் தென்னகத்திலே புகழ் பெற்ற சிவாலயங்களில் ஒன்றாகும். திருநள்ளாறு ஸ்தலம் காரைக்காலிலிருந்து மேற்கே 5.கி.மீ. தூரத்தில், கும்பகோணம் – மயிலாடுதுறை மார்க்கத்தில் உள்ளது. பழமை வாய்ந்த இந்த சிவாலயம் 7–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இக்கோயிலில் ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் மூலஸ்தானம் முதன்மையானது. இவை தவிர, ஸ்ரீ சனீஸ்வர பகவான், ஸ்ரீ பிராணாம்பிகை, ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ விநாயகர் சன்னதிகளும் உள்ளன. இந்த கோயிலானது இந்தியாவில் உள்ள பக்தர்களை மட்டுமின்றி மற்ற நாடுகளில் உள்ள பக்தர்களையும் கவர்ந்து ஈர்க்கின்றது. திருநள்ளாற்றில் மட்டுமே ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு தனி சன்னதி அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீ சனீஸ்வர பகவான் அபய ஹஸ்தத்துடன் அனுக்கிரக மூர்த்தியாக அருள்புரிகிறார். இக் கோயிலின் வரலாற்றுப்படி புராண பிரசித்த பெற்ற நளமகாராஜன் ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரரை வழிபட்டு, சனீஸ்வர பகவானின் அனுக்கிரகத்தால் துன்பங்கள் யாவும் நீங்கப்பெற்று பகவானின் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றார் என்பது ஐதீகம்.

### சனிப்பெயர்ச்சி விழா

நவக்கிரகங்களில் ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறார்.அவரை வணங்குவதன் மூலம் ஒருவரது ஜாதகத்தில் சனியினால் ஏற்படும் தோஷங்களும் துன்பங்களும் குறைவதாக ஐதீகம். வானவியலின்படி ராசி மண்டலத்தில் ஸ்ரீ சனீஸ்வரர் 2 1/2 வருடங்களுக்கு ஒரு முறை ஒரு இராசியிலிருந்து மற்றோரு ராசிக்கு இடம் பெயருகிறார். அந்த நாள் திருநள்ளாற்றில் சனிப்பெயர்ச்சி விழாவாக கொண்டாடப்படுகிறது. சனிப்பெயர்ச்சி விழாவில் இறைவழிபாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சனிப்பெயர்ச்சி விழா நாளில் திருமுறைகள் பாடப்படுகின்றன். ஸ்ரீ சனிஸ்வர பகவானுக்கு அன்றைய தினம் மிகப்பெரிய அளவில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். எண்ணெய், பால், தயிர், பன்னீர், இளநீர், பஞ்சாமிர்தம் ஆகியன அபிஷேகத்தின் போது பயன்படுத்தப்படுகின்றன.

சனிப்பெயர்ச்சி விழாவின் போது தங்க காக வாகனத்தில் ஸ்ரீ சனீஸ்வர பகவானை பக்தர்கள் தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது. சனிப்பெயர்ச்சி நாளன்று சிறப்பு அபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனையும் கீழ்க்கண்ட கட்டணம் செலுத்துவோர் பெயரில் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. சனிப்பெயர்ச்சி விழாவின்போது அபிஷேகம் செய்ய நபர் ஒன்றுக்கு | ரூ. 250.00 |
| 2. சனிப்பெயர்ச்சி விழாவின்போது சகஸ்ரநாம அர்ச்சனை நபர் செய்ய ஒன்றுக்கு | ரூ. 150.00 |

சனிப்பெயர்ச்சி விழாவின்போது 21.12.2011 காலை 7.51 மணிக்கு நடைபெறுகின்றது. இம்முறை ஸ்ரீ சனீஸ்வர பகாவன் கன்னியா ராசியிலிருந்து துலாம் ராசிக்கு இடம் பெயருகிறார்.

இதர தகவல்கள் விரும்புவோர் திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசியின் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

**Office : (04368) 236530**
**Fax : (04368) 236504**
**E.mail. sds.kkl@nic.in. Website: www.thirunallaru.org**

**Dr.பிராங்க்ளின் லால்டின்குமா, I.A.S.**
தனி அதிகாரி

**S.K.பன்னீர்செல்வம்**
நிர்வாக அதிகாரி (கோயில்கள்)

### குறிப்பு

ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனைகள் மற்றும் பூஜை செய்ய விரும்புவோர் மணியார்டர் அல்லது வரைவோலை மூலமாக உரிய தொகையினை நிர்வாக அதிகாரி ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு – 609607 என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வேறு வெளிநபர்களுக்கு அனுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

Reshma Printers_TRP. Cell : 90800 58092, 90800 66847